**Registered No. M. 878.**

235

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

Devoted to Theosophy, Religion,

Science, Art and Civilization.

தொகுதி 6 } 1915ஸ்ரீ நவம்பர்மீ / ராக்ஷஸஸ்ரீ கார்த்திகைமீ { பகுதி 7

அ ரங்கசாமி ஐயர், B.A,B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ ௨. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

236

# பொருளடக்கம்.
# CONTENTS.


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தற்கால நிலைமை--அ. ரங்கசாமி ஐயர். B A., BL., F.T S.<br>From the Editor-A Rangasamy Iyer. B A., BL., F T S. | | 241 |
| 2. | நட்பு—எதார்த்தமும், போலியும்<br>Friendship-True & False | பண்டித ம. கோபால கிருஷ்ணஐயர்<br>Pandit M. Gopalakrishna Iyer. | 248 |
| 3. | உதயதிசை நக்ஷத்திர சங்கத்தார்களுக்கு ஓர் விண்ணப்பம்.<br>An appeal to the members of the Order of the Star in East. | B. S. ராமசுப்பையர்.<br>B. S. Ramasubbier. | 249 |
| 4 | ஜகத்குரு ஸ்தோத்திரம்—E. V. நாராயணஐயர்.<br>An invocation to the World-Teacher. | E. V. Narayanier. | 252 |
| 5. | மீராபாய்—நாடகம்<br>Meera Bhai-Drama | ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் M A.<br>R. Srinivasa Iyer M. A. | 253 |
| 6. | ஓர் உபந்யாசம்—R. பஞ்சாபகேசஐயர். M A.<br>A Lecture (A. B.)—R. Panchapagesier. | | 259 |
| 7. | ஒரு சிறு விளக்கு—P. குமரப்பசெட்டி.<br>Little Lamp—P. Kumarappa Chetty. | | 264 |
| 8. | கடம்பூர் ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்து ரிப்போர்ட்டு.<br>Report of Kadambur Golden Chain. | R. பஞ்சாபகேசஐயர்.<br>R. Panchapagesier. | 265 |
| 9. | புத்தகவரவு.<br>Review of Books. | | 268. |
| 10. | சமாசாரம்.<br>News. | | 272 |
| 11. | கீதாஞ்சலி—P. குமரப்பசெட்டி.<br>Gtanjali—P. Kumarppa Chetty. | | 273 |
| 12. | தியானக்ரமவிஷயம்-கே. யஸ். ராமசந்திர ஐயர்<br>Meditations—K. S. Ramachandra Iyer. | | 275 |

237

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 } 1915௵ நவம்பர்௴ / ராக்ஷஸ௵ கார்த்திகை௴ { பகுதி 7.

## தற்கால நிலைமை.

பிரஹ்மக்ஞான சபையின் வருஷாந்தமஹோத்ஸவமானது இவ்வருஷம் பம்பாயில் அடுத்த டிஸம்பர் மாசம் 25-ம் தேதி முதல் 29-ம் தேதிவரை கொண்டாடப்படும். சபையின் அக்ராஸனாதிபதியாகிய மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்கள் அந்தமாசம் 25,26,27,28-ம் தேதிகளின் காலையில் பொது உபந்நியாஸங்கள் செய்வார்கள். 29-ம் தேதி காலையில் ஸ்ரீமான் ஜீனராஜதாஸர் ஒரு உபந்நியாஸம் செய்வார். இவ்வருஷத்தில் இந்ததேசத்தின் ராஜரீக சீர்திருத்தங்களை நாடுகின்ற இந்தியன் நாஷனல் காங்கிரஸ் என்ற மகா சபையும், அதேகாலத்தில் பம்பாயில் கூடப்போகின்றபடியால் இருசபைகளும் மிக்க உற்சாகத்துடன் கொண்டாடப்படும் என்பதில் ஐயமில்லை. பிரஹ்மக்ஞான

சபையைச் சேர்ந்தோர்கள் காங்கிரஸ் சபைக்குச் செல்வதற்குத் தடை ஏற்படாவாறு பிரஹ்மக்ஞானசபைக் கூட்டமும் இவ்வருஷம் பம்பாயில் கூடும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதென்றே நாம் சொல்லத்தகும். இதற்கு முன் பிரஹ்மக்ஞான சபைக் கூட்டமானது பொதுவாக, அடையாற்றிலும் காசியிலும் மாறி மாறிக் கூடி வந்தது, இவ்வருஷத்தில் பிரஹ்மக்ஞான சபையானது காங்கிரஸ் கூடும் பம்பாயில் கூடுவதற்குக் காரணம், நம்முடைய அக்கிராஸனாதிபதியாகிய மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் காங்கிரஸ் சபை ஸம்பந்தமான ராஜரீக சீர் திருத்தங்களை அப்பியாஸத்திற்கு வரும்படி முயற்சிக்க உடன்பட்டு, அச்சபைக்கு விஜயம் செய்யவேண்டியிருப்பதாலும் அவர்கள் இல்லாது பிரஹ்மக்ஞானசபையின் வருஷாந்தக் கூட்டமானது கௌரவ மடையாததாலும் பம்பாயில் நமது சபை கூடும்படி ஏற்பட்டது.

***

பிரஹ்மக்ஞான சபைக்கும் ராஜரீக விஷயங்களுக்கும் எவ்வித தொடர்பு உளது என நமது நண்பர்கள் வினவக்கூடும். உலகமானது பூரணஞானத்தை அடைந்த அதிகாரி புருஷர்கள் என்ற ரிஷிகள் ஒன்றுசேர்ந்த ஒரு கூட்டத்தின் ஆளுகையின் கீழ் உளது. அச்சபையில் உள்ளோர்கள் உலகத்தில் உள்ள மானிடர்களைக் காட்டிலும் சக்தியிலும் ஞானத்திலும், அன்பிலும், அளவிற்கெட்டாது சிறந்தோராயினும், அவர்களுக்குள் அவரவர்கள் சக்திகளாலும் அவரவர்களுடைய பிரவர்த்திகளாலும் ஏற்பட்ட வேறுபாடுகள் உள. உலகத்தின் க்ஷேமத்தை நாடி விகாஸமுறையில்

உலகத்தையும் உலகத்தோரையும் செலுத்துவதில் அந்தரிஷிகள் எல்லோரும் ஒரே மனதுடையோர்களாகையால், அவர்களால் அநுசரிக்கப்படும் சக்தியானது ஸூக்ஷ்ம உலகங்களிலிருந்து இவ்வுலகில் ஓர் அருவிபோல் பற்பல காலங்களில் இறங்கி பல பக்கங்களில் பாய்ந்து, உலகத்தோர்கள் விகாஸ முறையில் செழித்தோங்க ஓர் பிரவாகம் போல் செல்லுகின்றது. ரிஷிகள் அவ்வக்காலங்களில் உலகத்தோருக்கு விகாஸ முறையில் ஓர் எழுச்சியைக் கொடுப்பதுமல்லாமல், அச்சக்தியை விசேஷமாய் உபயோகிக்கும் தேசத்தோருக்கும் கூட்டத்தோருக்கும் விசேஷ அபிவிருத்தி உண்டாகக்கூடியது.

***

இதற்கு உதாரணங்கள், உலகசரித்திரத்தில் பல காணலாம். இந்தியா முதலிய கீழ்த்திசைத்தேசங்களில் தோன்றிய நாகரிகத்திற்கும் அந்நாகரிகத்திற்கு முக்கிய அங்கங்களாகிய மதம், கல்வி, ஆசாரம் முதலியவைகளுக்கும் மேற்றிசைத் தேசங்களடங்கிய ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாகரிகத்திற்கும் அதைச் சார்ந்த மதம், கல்வி, ஆசாரம் முதலியவைகளுக்கும் விசேஷ வித்தியாஸங்கள் தற்காலத்தில் காணப்படுகின்றன. அவ்வித்தியாஸங்கள் அநேகமாயிரவருஷங்களாகப் பலப்படுத்தப்பட்டுத் தற்கால அமைப்பை அடைந்திருக்கின்றன. அவ்விரண்டு நாகரிகங்களிலும் உலகத்திற்கு ஸாதகமான குணங்கள் ஒன்றில் தோன்றுதவை மற்றொன்றில் விசேஷமாய் உள்ளன. முக்கியமாகக் கீழ்த்திசை நாகரிகத்தில் தத்துவஞானத்திற்கு பிரதமமான ஸ்தானமும், மேற்றிசைநாகரிகத்தில் இவ்வுலகத்

திற்குரிய இந்திரிய கோசரமான பௌதிகசாஸ்திரங்களின் பயிற்சிக்கும், அவைகளைச்சார்ந்த முயற்சிகளுக்குமே விசேஷமான முதன்மையும் ஏற்பட்டிருக்கின்றன. அக்காரணத்தால் மேற்றிசையோர்கள் இஹத்தில் சுகத்தைக் கொடுக்கிற ராஜதந்திரத்திலும் ஆளுகையிலும், நானாவித யந்திரங்களை நிர்மாணம்செய்வதிலும் மிகத்தேர்ச்சியை அடைந்திருக்கிறார்கள். ஆத்மார்த்தமான பலன்களைக்கொடுக்கிற மதங்களை ஸ்தாபித்த மதாசாரியர்கள் கீழ்த்திசையிலேயே அவதரித்திருக்கின்றனர். இவ்வாறு இவ்விருவகை நாகரிகங்களின் மேன்மையான குணவிசேஷங்கள் இவ்வுலகின் அபிவிருத்திக்குமுக்கியமானவை. ஆகையால் உலக சரித்திரத்தில் இவ்விருவிதநாகரிகங்களில் ஒன்று மேம்பாட்டையடைந்து மற்றொன்றை நாசஞ்செய்யும் சமயத்தில் அம்மற்றொன்று பலமடைந்து கைதூக்கப்பட்டு வந்திருக்கின்றது.

***

சரித்திர நூற்களில் ஐரோப்பாக்கண்டத்தைச் சேர்ந்த கிரேக்தேசத்திலிருந்து அலெக்ஸாந்தர் என்ற யுத்தவீரன் இந்து தேசத்தில் படையெடுத்ததாக எழுதப்பட்டிருக்கிறது. சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னர் அந்த கிரேக் தேசத்து நாகரிகமானது இந்தியநாகரிகத்துடன் கலந்தது. அதற்கப்பால் கீழ்த்திசையைச் சார்ந்த அரபியர்களின் நாகரிகமானது ஸ்பெயின் முதலிய தேசங்களில் புகுந்து வியாபித்து, பிரான்ஸ்தேசத்தில் பிரவேசித்து ஐரோப்பாக் கண்டத்தை வசப்படுத்தும் சமயத்தில் மகம்மதியர்கள் பிரான்ஸ்தேசத்தில் டூர்ஸ் என்னுமிடத்தில் தோல்வியடைந்ததின் நிமித்தமாக மேற்றிசையாரின் நாகரிகத்திற்கு

உதவிபுரியப்பட்டது. மறுபடியும் மேற்றிசையோர்களாகிய ஐரோப்பியர்கள் முதலில் வியாபாரமுறையில் உலகெங்கும் பரவி அதின் மூலமாய் ஆசியாக்கண்டத்தில் செல்வாக்கு அடைந்து அவர்களது நாகரிகமானது கீழ்த்திசையோரின் நாகரிகத்தை நாசம்செய்யும் தருணத்தில் ஜப்பானியர் ருஷியர்களைவென்று கிழ்த்திசையோருக்குஒரு கௌரவத்தைக் கொடுத்து அவர்களது நாகரிகத்திற்கு ஓர்வித ஊக்கத்தை அளித்தார்கள. வருங்கால உலக நாகரிகத்தில் அவ்விரண்டு நாகரிகங்களும் ஒன்று சேர்ந்து அவைகளின் தோஷங்கள் நீங்கி குணங்கள் மட்டும் அமைக்கப்படின், அவ்விரண்டு நாகரிகங்களின் முக்கிய லக்ஷணங்களை அந் நாகரிகங்கள் ஒன்ருக அமைக்கப்படும்வரை உலகில் பாதுகாப்பது உலகத்தி னுளுகையை மேற்கொண்ட ரிஷிகளின் கூட்டமாகிய வெள்ளியம்பலத்தோரின் கடமையாகும்.

***

அவர்களில் வைவஸ்வத மநுவானவர் ஆளுகை என்ற தொழிலைக் கைப்பற்றி அவ்வகுப்பில் தலைமைபூண்டவர் உலகத்தில் ஒவ்வொரு விசாலமான பிரதேசத்தின் அபிவிருத்தியை மேல்பார்க்கும் வெவ்வேறு தலைவரும் உளர். இந்தியதேசத்தின் தலைமைபூண்ட ரிஷியானவர் தென்னிந்திய மலைப்பிரதேசத்தில் உளர். ஐரோப்பாக் கண்டத்தின் பிரதிநிதியானவர் முன் நூற்ருண்டுகளில் Comte St Germain என்ற நாமம் தரித்தவர். மானிட வர்க்கத்தில் 5-வது ஜாதியாராகிய ஆரியர்கள் அநேகமாயிரம் வருஷங்களுக்கு முன் அவர்கள் வாசஸ்தலமாகிய மத்தியஆசியாக்கண்டப் பிரதேசங்களினின்று வெளியேறி அரபிதேசத்தில்ஒரு வகுப்பினர் குடியேறி அங்கிருந்து எகிப்து முதலிய தேசங்க

ளில் புகுந்தும் மற்றொரு வகுப்பினர் பாரஸீக தேசத்தில் சென்றும், இன்னும் ஒருவகுப்பினர் கிரீஸ், இத்தாலியா முதலிய தேசங்களிற் குடியேறியும் மற்றொரு வகுப்பினர் ஐரோப்பாக் கண்டத்தின் வடமத்திய பிரதேசங்களிற் சென்றும் இன்னும் ஒரு வகுப்பினர் இந்தியதேசத்தில் குடியேறியும் அப்பால் காலக்கிரமத்தில் பல தேசங்களிற் சென்று தற்காலத்தில் ஆரியர்கள் உலகமுழுவதும் பரவியிருக்கிறார்கள்.

***

ஐந்தாவது ஜாதியாகிய ஆரியர்களுடைய லௌகிக நாகரிகமும் சிறப்பும் உன்னதமான நிலைமையை இனிமீது அடையத்தக்கது. நான்காவது ஜாதியோர் அநேகமாயிரம் வருஷங்களுக்கு முன்னர் அட்லாண்டிக் மஹாசமுத்திரத்தில் மூழ்கிக்கிடக்கின்ற பிரதேசங்களில் வாழ்ந்து அவர்களது உன்னதமான நிலைமையை அடைந்து நாகரிக அபிவிருத்தியில் மேன்மையைக் கைக்கொண்டார்கள் சீனர், ஜப்பானியார் முதலானோர் அந்த நான்காவது வகுப்பைச் சார்ந்தவர்கள். ஆரியர்களின் நாகரிகத்திற்கு ஆதாரமாக ஒரு World Empire அல்லது ராஜ்ய மண்டலம் அமைக்கப்படத்தக்கது. அதற்கு பிரிட்டிஷ் ராஜ்யமண்டலம் ஓர் விதைபோல் உள்ளது. பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்தில் ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் அங்கத்தினர்களாயிருப்பதால், அவர்கள் மூலமாய் ஆரியர்களின் நாகரிகம் இருவகையாய்ப் பிரிந்து மேற்கில் உலக விவகாரங்களில் தேர்ச்சியடைந்த ஐரோப்பிய நாகரிகமாகவும் ஆத்மக் ஞானத்தைப் பிரதானமாகக் கைக்கொண்டு பரகதியை முதன்மையாகக் கருதிய இந்திய நாகரிகமாகவும் தோன்றி

யிருக்கின்றது. ஐந்தாவது ஜாதியார் உன்னத நிலையை யடையுங்கால் இவ்விரண்டு நாகரிகங்களும் ஒன்று சேர்ந்து அவைகளின் தோஷங்கள் நீங்கி அவைகளுடைய குணங்கள் பலப்பட்டு அவைகளிரண்டும் ஒன்ருகி அவ்வொன்றினுக்கு அவ்விராஜ்ய மண்டலம் உறைவிடமாகும்.

***

ஆகையால் அவ்விராஜ்ய மண்டலத்தில் நமது தேசமானது இப்பொழுது நிகழும் யுத்தத்திற்குப் பின் அதற்கேற்ற ஸ்தானத்தை வகிக்கும்படி செய்யப் பெருமுயற்சிகள் தற்காலத்தில் செய்யப்பட்டு வருகின்றன. ரிஷிகள் கூட்டத்தில் இந்திய தேசத்தின் க்ஷேமலாபத்தைக் கைக்கொண்டு அதின் அபிவிருத்தியை மேற்பார்க்கும் மகரிஷியின் அநுக்கிரஹமும் அம்முயற்சிகளுக்கு ஸாதகமாயிருக்கின்றது. இச்சமயத்தில் ரிஷிகளின் கருத்திற் கிசைந்த கைங்கரியத்தைக் கைக்கொள்ளும் பிரஹ்மஞ்ஞான சபையும் அதின் தலைவர்களும் இந்திய தேசத்தின் ராஜ்ய சீர்திருத்தத்தில் விசேஷ ஊக்கத்தைச் செலுத்தி உழைப்பதற்கு அதுவே காரணமாகும்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

---

## நன்மொழி.

கருணை ததும்பிப் பொதுநோக்கும் கண்ணிற் கிடைத்த கண்ணே யோர் கனியிற் கனிந்தன் புருவான கருத்திற் கிடைத்த கருத்தேமெய், யருணனிலையினது வதுவா யறிவிற் கிடைத்த வறிவே யென்னகத்தும் புறத்து மொளிநிறை வித்தமர்ந்தகுருவே யைம்பூத, வருண முதலாயவை கடந்த வரைப்பாய் விளங்குமணி மன்றில் வயங்கு சுடரேயெல் லாம்செய் வல்ல குருவே யென்னுளத்தே, தருணநடஞ் செய்யரசே யென்ருயே என்னைத் தந்தாயே தனித்த தலைமைப் பதியே யித்தருணம் வாய்த்த தருணமதே.

---

# நட்பு—எதார்த்தமும், போலியும்.

## FRIENDSHIP—TRUE & FALSE.

[இது Barnfield என்ற ஆங்கிலப்புலவர் இயற்றிய "Everyman that flatters thee &c" என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு.]

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பதே நட்பு—திருக்குறள்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு—திருக்குறள்.

---

உனைமுகஸ் துதிசெயும் ஒருவனும் துன்புநீ
உற்றுழி உதவிசெய் உறவினன் ஆகான்
வாய்வரும் வார்த்தை வாயுவின் எளிதே.
உற்றநண் பரைக்கண் ணுறல் தான் அரிது.
விரயம் செய்ய திரவியம் உளவரை
நினக்கோவ் வொருவனும் நேயனாய் இருப்பன்.
உறுநிதி மட்டும் குறைவுறு மாயின்,
நினது குறையினை நிரப்பிடான் எவனும்,
ஊதாரி யாக ஒருவன் உளனேல்
"இவனோர் அரசனாய் இராததென் ? பாவம்!" என்
றித்தகை இச்சகம் இயம்பி அவனை
'உதார குணம்படைத் துள்ளவன்' என்பர்.
ஆயினும் திருமகள் அருள் ஒரு தடவை
போய் விடின் அவன் நற் புகழும் போய்விடும்.
முன்னம் அவனை முகஸ்துதி செய்தோர்
அவன் கூட்டுறவினை அற இனி ஒழிப்பர்.
உண்மையில் நினதுமெய்ந் நண்பன் நினக்கு நீ
துன்புறுங் காலையில் துணைபுரிந் திடுவன்.
நீகவல் கையில்கண் ணீர்விட் டழுவன்
நித்திரை யேகொளான் நீவிழித் திருப்பின்.
இவ்விதம் மனத்துறும் ஒவ்வொரு துயரிலும்
அவனும் நின்னோடு அடைவன் ஓர் பங்கு.
அகநட் பையும்முக நகமொழி பகையையும்
அறிதற் காகுநல் அறிகுறி இவையே.

பண்டித ம. கோபாலகிருஷ்ணையர்
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து
அக்கிராசனாதிபதி.

245

## உதயதிசை நக்ஷத்ர சங்கத்தார்க்கு விண்ணப்பம்.

பிரஹ்மக்ஞானமந்திரம்,
மதுரை, 2—11—15.

ஸஹோதரர்களே!

உதயதிசை நக்ஷத்ர மெம்பர்கட்கு நமஸ்கார பூர்வமான விக்ஞாபநம். நாமெல்லோரும் சமீபகாலத்தில் ஓர் லோககுரு வரப்போகிறாரென்றுணர்ந்து பிரதிக்ஷணமும் அவரையே மனத்தில் தியானித்து, எக்கருமத்தையும் அவர் பெயராலேயே செய்துவருகிறோம். தற்காலத்தில் அவர் வருகைக்குமுன் ஆயத்தமாக நாம் செய்யவேண்டிய கடமை என்னவெனில், ஜகத்குருவின் திருவரவைத் தமிழ் நாட்டார் அனைவருக்கும் பஹிரங்கப்படுத்துவதேயாகும். உதயதிசை நக்ஷத்திர சங்கத்தில் ஏற்கனவே சேர்ந்திருக்கும் தமிழ் மெம்பர்களாகிய நாம், இதுவரை இந்நற்செய்தியை நம் அயலார்களுக்குள் பரவச்செய்ய யாதொரு பெரிய நன்முயற்சியையும் தேடவில்லை. ஆங்கிலம் முதலிய இதர பாஷைகளிலோ, அந்தந்த பாஷாபிமானிகள் ஏராளமான துண்டுப்பத்திரிகைகளை அச்சிட்டுத் தபால் மூலமாய் அறிமுகம் இல்லாதவர்களுக்குக்கூட அனுப்பி பெரியாரின் திருவரவை உத்கோஷிக்கின்றனர்; கூட்டுறவென்பது தமிழர்களிடம்மட்டும் பிரகாசியாமலிருப்பது அழகல்லவே! இவ்விஷயத்தில் நாம் ஒருங்கேசேர்ந்து முயற்சிக்குமாறு நம்மைத் தூண்டுவதற்கு பெங்களூரிலுள்ள சைன்னியத் தலைவராகிய மேஜர் ஹார்ட் என்பவர் ஏற்பட்டிருக்கிறார். நம்மிடம் இயற்கையாய்க் கூட்டுறவு ஏற்படாவிடினும் நம் மேஜருடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து, கீழ்ப்

படிதல் என்ற நற்குணத்தையாவது கைக்கொண்டு முன்னுக்கு வரலாம். இப்போது இந்த மேஜருக்கு நாம் கீழ்ப்படியத் தவறுவோமானால், மேஜருக்கும் மேஜராய் இவ்வுலகில் தோன்றப்போகும் பெரியாரைத் தெரிந்துகொள்ளுதல் சிரமமேயாகும். அவருக்கும் கீழ்ப்படியத் தவறுவோம். மேஜரவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் அவர் கேட்டுக்கொண்ட பிரகாரமே இவ்விண்ணப்பம் தங்கட்கு எழுதலானேன். ஆகையால் தங்களாலியன்றவரை பரமாசாரியரின் திருநாமத்தை முன்னிட்டுத் தீவிரமான சிரத்தையோடு முயற்சித்து, திரவியம் சேகரிக்குமாறு வேண்டுகிறேன். இப்போது அவசியம் பிரசுரித்துத் தீரவேண்டியதாய் உத்தரவு பிறந்திருக்கிற நான்கு டிராக்டுகளுக்கும் செலவாகக்கூடியதை இதன்கீழ் குறித்திருக்கிறேன்.

| | | | ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 1. | உதயதிசை நக்ஷத்ர ஸங்கம் (ஆறு கொள்கைகள்.) | 10000 | 20—0—0 |
| 2. | ஷை (வேறு) | 10000 At Rs. 17-8-0 each | 35—0—0 |
| 3. | நக்ஷத்திர தூதர்களின் ஸங்கம். | | |
| 4. | லோக குருக்கள். | 10,000 | 35—0—0 |

தமிழ் ஜில்லாக்களில் மொத்தம் 15 கிளைச்சங்கங்கள் உள்ளன. எந்தக்கிளைச்சங்கமாவது அல்லது எந்தப்பிரபுவாவது ஏதாவதொரு டிராக்டுச் செலவைப் பொறுத்துக் கொள்வாராயின், இந்தக்கிளைச்சங்கத்தின் அல்லது இந்தப் பிரபுவின் பொருளுதவியால் பிரசுரிக்கப்பட்டது என்று அப்பத்திரிகையின் தலைப்பில் அச்சிடப்படும். பரமாசார்யரை சமீபித்தல் தியாகத்தாலன்றி இயலாது.

ரூ-3 அனுப்புவோர்க்கு வகைக்கு 250 வீதம் நாலு டிராக்டுகளும், ஆ மொத்தம் 1000 காப்பிகள் அனுப்பப்படும். நக்ஷத்ரக் கிளைச்சங்கத்தார்கள் எல்லோரும் இவ்விதம் ஆதரிக்குமாறு வேண்டுகிறேன். ரூ-$1\frac{1}{2}$ அனுப்புவோர்க்கு 500 காப்பிகள் அவ்விதம் அனுப்பப்படும். தபாற் கூலி பிரத்யேகமாய் சார்ஜ் செய்யப்படும்.

தங்களன்புள்ள

B. S. ராமசுப்பையர்.

மொழிபெயர்ப்புக் காரியதரிசி.

மேஜரவர்கள் எழுதியது பின்வருமாறு:—

" தமிழ்ஜில்லாக்களில் தான் விசேஷமாய் பிரஹ்மக்ஞான சபைகள் அதிகமாய் ஏற்பட்டிருக்கின்றன. கன்னடபாஷையில் டிராக்டுகள் அச்சடிப்பதற்கு வேண்டிய பணம், 4 டிராக்டுகளுக்குமாக ஒரு மீட்டிங்தினமன்று வசூலிக்கப்பட்டது. தமிழ் நாட்டாரைப்போல் கன்னடஸ்தரில் அவ்வளவு ஐசுவர்யவான்களான நக்ஷத்திரமெம்பர்கள் கிடையாதென்பதே என் அபிப்ராயம்."

ஜஸ்டிஸ் ஸதாசிவஐயரவர்கள் மேற்கூறிய விஷயத்திற்கு ரூ. 17-8-0 கொடுத்துதவியிருக்கிறார்.

B. S. R.

---

2:48

# ஜகத்குரு ஸ்தோத்ரம்.

(ராகம்-ஆரபி: தாளம்-ஆதி: தேவாரமெட்டு.)

1. உலகமெலாம் நலமிகவே ஓங்கும்பல மதங்களுக்கும்
தலைவ,வெள்ளை யம்பலத்தின் தூயவனும் நாயகனே
நிலவுலகி லினியுமிப்போ நீயிறங்க வெதிர்பார்க்கும்
பலவிதமாம் மனிதருக்கும் பரிந்துதவி புரிந்திடுவாய்
சற்குருவே யருளுருவே சகலருக்கும் வான்தருவே
சற்குருவே நின்வரவே (நாம்) சகலரும்செய் தவவுரு (வே

2. சண்டையிடும் ஜநங்களினிச் சமர்புரியும் வினைநீங்க
விண்டிடுவாய் சாந்தியினை மேதினியில் மேலாக
கொண்டுசகோ தரத்துவத்தைக் கொடும்போரை (விடும்படிசெய்
தண்டியனை வரும்நாமொன் றென்றறிய வருளுவாயே.
(சற்குருவே * * * )

3. வந்திடுக நின்னன்பாம் வலியுடனே வந்திடுக
வந்திடுக நின்சத்தாம் மாட்சியுடன் வந்திடுக
அந்தரர்க்கும் மனிதருக்கும் மாசிரிய னைவனே
உந்தனது திருவரவா லுலகமெலாம் காப்பாயே.
(சற்குருவே * * * ).

4. கொள்ளைகொள்ளும் பேரொழிய குவலயத்தி லருள் (பொழிய
பிள்ளையிடம் தாய்போன்ற பெருங்கருணை மேகமதாய்
கிள்ளைமொழி கிளத்ததுபோல் கிளர்சாந்தி பகர்ந்தி (டவே
வெள்ளையம்ப லத்தருளே விரைவாய்நீ வருவாயே.
(சற்குருவே * * * )

E. V. நாராயண ஐயர். F. T. S.
தமிழ்ப்பண்டிதர், மஹாராஜா காலேஜ், திருவனந்தபுரம்.

# மீராபாய்.

(214-ம் பக்கத்தொடர்ச்சி.)

## அங்கம் 1 களம் 3.

இடம்—கும்பாஜீராணுவினரண்மனையிலோரறை.

நாடகப்பாத்திரர்—கும்பாஜி.

கும்—(தனக்குள்) என்னுடைய பாக்கியமே பாக்யம். இத்தகைய பத்தினியைப்பெற்ற பெரும் செல்வம் வேறு யாருக்குக் கிடைக்கும்! நேற்றையதினம் அவள் தனது சிறுமைப் பிராயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததவ்வளவும் எவ்வளவு ஆச்சரியசரமாயிருந்தது! விவாகமே வேண்டாமென்று சொல்லியுமென்னை மணந்தாளல்லவா, மணந்தபிறகு என்னிடமெவ்வளவு அன்பு வைத்திருக்கிருள்! இதுவுமெனது புண்யவசமே.

கும்—(சுந்தரி வருகிருள்)சுந்தரி,வா, என்ன சமாசாரம்?

சுந்—ஒன்றுமில்லை, மீராபாயைத் தேடிவந்தேன். எங்கேயும் காணேம். ஒருவேளை இங்கிருப்பாளோவென்று பார்க்கவந்தேன்.

கும்—என்ன சுந்தரி, இப்போதவள் ஆலயத்திற் கேகும் சமயமல்லவா?

சுந்—ஆனுலவளது பல்லக்கு இங்கே இருக்கிறதே?

கும்—அப்படியா? (சற்றுயோசித்து) ஒருவேளை நடந்துபோயிருக்கலாம்.

சுந்—(ஆச்சரியத்தை நடித்து) ஓஹோ, சரிதான், அதனுல் தானவர்கள் அப்படியெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்கள், நெருப்பில்லாவிடத்திற் புகை புறப்படுமோ?

250



கும்—(திடுக்கிட்டு) என்ன சுந்தரீ, என்னசொன்னாய்?

சுந்—ஐயோ! என் வாய் சும்மாவிருக்கலாகாதா? சொல்லவேண்டா மென்றிருந்தேனே, என்னையறியாமல் வாய்தவறி வெளிவந்துவிட்டதே வார்த்தை, நாதா, என்னை மன்னிக்கவேண்டும். ஏதோ தவறிச் சொல்லிவிட்டேன். அதையொரு பொருட்டாக வெண்ணிக் கேட்கலாகாது.

கும்—சுந்தரீ, என்ன பிதற்றுகிறாய்? சமாசாரமென்னவென்று சொல்லுகிறாயா மாட்டாயா?

சுந்—நாதா, இதென்ன, இவ்வளவு நிர்ப்பந்தமாகக் கேட்கிறீர்களே. ஏதோ ஞாபகமறதியாயுளறினேன், அவ்வளவுதான்.

கும்—(கோபத்தோடு)சுந்தரீ இதென்ன?நான் கேட்கிற கேள்விக்குப் பதிலுரைக்காமல் என்னவெல்லாமோ சாக்குச் சொல்லுகிறாய். இப்போது சமாசாரமென்னவென்று சொல்லுகிறாயா என்ன?

சுந்—(பயத்தை நடித்து) அரசே ஒரு எளிய ஸ்திரீ ஜனத்தின்மீது தாங்களிவ்வளவு கோபங்கொண்டால் நான் என்னசெய்வேன்? நான் ஒன்றும் சொல்லக்கூடாதென்று எவ்வளவு ஜாக்கிரதையாகவேயிருந்தேனே. என்னையறியாமலே என் வாயுளறிவிட்டதே. இவ்வித மென்மீதுகோபம் கொள்வதுதங்களுக்கழகல்ல. நான்கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். என்மீது தயவுசெய்து நானேதோசொன்னேனென்பதை மறந்துவிடவேண்டும்.

கும்—(தரையில் காலையுதைந்து) என்ன சொன்னாய், சுந்தரீ நான்கேட்டகேள்விக்கு உத்தரமளிக்கிறாயா என்ன? ஏது இவ்வளவு பிடிவாதமுனக்கு? மரியாதையாய் சமாசாரமென்னவென்பதை உடனே சொல்லு.

சுந்—ஈசா, இப்படியுமொருகதி எனக்கு வரவேண்டுமோ? நான் எப்படி அந்த சமாசாரத்தை வாய்விட்டுரைப்பேன்? அதுவும் என்னருமை சகோதரியான மீராபாயைப் பற்றின இச்செய்தியை நானெவ்விதமுரைப்பேன்? நாதா நானிப்போதே சொல்லுகிறேன். இதைக் கேட்டால் நீங்கள் மிக வருத்தப்படுவீர்கள். அப்படித்தங்களை வருத்தும் சமாசாரத்தை நானெவ்விதம் வெளியிடுவேனென்றுதான் தயங்குகிறேன்.

கும்—எப்படிப்பட்ட சமாசாரமாயிருந்தாலும், யாரைக் குறித்ததாயிருந்தாலும், எனக்கெவ்விதத் துக்கத்தை விளைவிப்பதாயிருந்தாலும், அதை உடனே சொல். தாமதித்தால் பிறகு என்னநேரிடுமென்பதைச் சற்று கவனி.

சுந்—(தயங்கி) நாதா, நான் சொல்லவேண்டுமென்று நினைத்தாலும் என் நாவெழமாட்டேனென்கிறதே. சற்று முன்பு மீராபாயைக் காணவேண்டுமென்கிற எண்ணத்தோடு அவளுடைய அந்தப்புரத்துக்குப் போனேன். அங்கே அவளில்லாததுகண்டு தங்களைக் கேட்கலாமென்றிங்கு வந்துகொண்டிருக்கையில், அவ்வந்தப்புரத்துக்கு வெளியிலுள்ள திண்ணையில் சில சேவகர்களும் சேடிகளுமுட்கார்ந்து ஏதோ மெதுவாய் பேசிக்கொண்டிருந்தார்கள். அதை நான் கவனியாமலிங்கே நோக்கி வரும் சமயத்தில் "மீராபாய்" என்ற வார்த்தை யென் காதில் பட்டது. அது கேட்டு "இவர்கள் பட்டராணியைப்பற்றி என்ன பேசுகிறார்கள். சற்று கவனிப்போம்" என்று அங்கு சற்று மறைவாய் நின்று கவனித்தேன். அவர்கள்—

கும்—ஏன் தயங்குகிறாய்? சமாசாரத்தையுரை.

சுந்—"இதென்ன, அவமானமாயிருக்கிறது. மஹாராணியாவது கால்நடையாய் நடந்து கோயிலுக்குப்போவதாவது, இதென்ன அநியாயம்! இதற்கெப்படி மஹாராஜா சம்மதப்பட்டார்," என்றான் ஒரு சேவகன். அதற்கு மற்றொரு சேடி, "இதுமட்டுந்தானே? இதெல்லாம் வெறும் வேஷம். உண்மை வேறு. அந்த ரகசியமெல்லாமெனக்கல்லவோதெரியும்." என்றென்னவெல்லாமோ சொன்னாள் இதைக் கேட்க சகியாமல் "ஹா" என்று பெருமூச்செறிந்தேன். அவ்வரவம் கேட்டு அவர்களுடனே கலைந்துவிட்டார்கள். நாதா நான் சமாசாரத்தைச் சொல்லியாய்விட்டது. இனி யென்னையொன்றும் கேட்கவேண்டாம்.

கும்—(பக்கத்திலுள்ள ஓராசனத்தின்மீது தள்ளாடிச் சாய்ந்து) சுந்தரீ ஆ!

சுந்—நாதா, இதற்குத்தானப்போதே ஒன்றும் சொல்லமாட்டேனென்று சொன்னேன். தாங்கள் நிர்ப்பந்தப் படுத்தினீர்கள்.

கும்—நன்றாகக் காதுகொடுத்துக் கேட்டாயா?

சுந்—இதில்வேறு சந்தேகமா? என்னைச் சொல்லச் சொல்லுவானேன், பிறகிப்படிச் சந்தேகப்படுவானேன்?

கும்—அந்தச் சேவகர்கள் சேடிகள் யாரென்று பார்த்தாயா?

சுந்—அதுதானே முடியவில்லை. உடனே கதவைத் திறந்து வெளித்திண்ணைக்குவந்து பார்த்தேன். நான் பார்ப்பதற்கு முன்னேயே, நான் "ஆ" யென்ற சப்தத்தைக் கேட்டு மறைந்துவிட்டார்கள். அங்கே ஒருவரையும் காணோம். ஆனலவர்கள் மீராபாயினந்தப்புரத்தைச் சேர்ந்

தவர்களாகத்தானிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இல்லாவிட்டாலந்தத் திண்ணையிலுட்கார்ந்து பேசக் காரணமில்லை.

கும்—(முகத்தைக் கையால் மூடினவண்ணமாயிருக்கின்ருன்.)

சுந்—நாதா, இதற்காகத் தாங்கள் வருந்தலாமோ. இதற்காகத் தானதை யுரைக்க மாட்டேனென்றேன். இதைக்கேட்டால் மனவருத்தப்படுவீர்களென்று தெரியுமே. நானிந்த சமாசாரத்தைக் கேட்டபோது என்மனம் பட்டபாடு ஈசனுக்குத்தான் தெரியும். நான் வருத்தப்பட்டாலும் தங்கள் காதிலிதைப் போடலாகாதென்று தீர்மானித்திருந்துமிங்கே ஏதோ தெரியாமலுளரின வார்த்தையின் நிமித்தம் சமாசாரம் முழுவதையும் சொல்லி தங்கள் மனதைக் கலக்கலானேன். இந்தப் பாபியின்வாய், சும்மாவிருந்திருக்கலாகாதா? தங்களையிப்படி வருந்தச்செய்த என் நாவையறுத்தாலென்ன?

கும்—சுந்தரீ, இதென்ன பிதற்றுகிருய்? நான் கேட்டதற்குப் பதிலுரைத்தாய். அவ்வளவுதானே. எனக்கொன்றும் தோன்றவில்லையே, என்தலை சுழலுகிறதே. என் மனம் என்னவெல்லாமோ எண்ணுகிறதே!

சுந்—நாதா, தாங்களிதைக்குறித்து இவ்வளவு சினமடையலாமா? ஜகத்தில் நாலுபேர் நாலுவார்த்தை சொல்லுவார்கள். அதையெல்லா மொருபொருட்டா யெண்ணலாமோ. யாரோ ஏதோ சொன்னர்கள், அதுயாரென்று கூடத்தெரியாது. அதற்காக இவ்விதம் மனங்கலங்கலாமா?

கும்—சமாசாரம் சாதாரணமானதல்லவே. முழு சமாசாரம் தெரிந்தாலாவது மனதுக்காறுதலா யிருக்கும். அரைகுறையாய்க் கேட்டவார்த்தை யானதாலதிலிருந்து என்னவேண்டுமென்ருலும் நினைக்கலாமே. அந்தச்சேடி

2-54



சொன்னதைப் பார்த்தாலேதோ பெரிய ரஹஸ்யமவள் கையிலிருக்கிறதுபோல் தோன்றுகிறது.

சுந்—நாதா, இவ்விதம் தங்கள் மனதைச் சஞ்சலப் படவிடலாகாது. இதையெல்லாம் மறந்துவிடும். அவர்கள் சொன்னவார்த்தை யொய்யோ மெய்யோ யார் கண்டார்கள்! அதுவும் மீராபாயைப்பற்றி இவ்வித சமாசாரத்தை யார் நம்புவார்கள்?

கும்—நீயே சற்று முன்பாகச்சொன்னுயே, நெருப்பில்லாவிடத்திற் புகையேது? இவர்கள் காரணமின்றி இவ்விதம் பேசுவார்களா? ஒருநாளும் மாட்டார்கள்.

சுந்—அதுவும் வாஸ்தவந்தான். ஆனாலிந்த ஸ்திரீரத்னமாகிற மீராபாய் விஷயத்திலிந்த சமாசாரத்தை நம்ப என் மனம் துணியவில்லை.

கும்—(யோசித்தவண்ணம்) நீ நம்பாமற் போனாலிதைப்பற்றி நான்கவனிக்காமலிருக்கமுடியுமா, கவனிக்காமலிருப்பது சரியா? ஆனாலிப்போது நானென்ன செய்வது? சொன்னவர்கள் யாரென்று தெரியவில்லை, சமாசாரம் பூரணமாகக் காதில் விழவில்லை. இதற்கென்ன செய்யலாம் மீராபாயைக் கேட்கலாமா? சீ, எப்படிகேட்பது, எதைக் கேட்பது? சரியான காரணமில்லாம லவளிடத்திலதைப் பற்றிப்பேசுவது சரியல்ல. சுந்தரீ இதைப்பற்றி நீ ஒருவரிடத்திலும் பேசக்கூடாது. நான் யோசித்துப்பார்த்துப் பிறகு என்ன செய்யலாமென்று தீர்மானிக்கிறேன்.

(திரை விழுகிறது)

(காட்சிமுடிகிறது)

(தொடரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர், M. A.
புரொபஸர், மஹாராஜா காலேஜ், திருவநந்தபுரம்.

255

## ஓர் உபந்யாஸம். *

அன்பர்களே!

மிஸ்டர் ராமஸ்வாமி ஐயங்கார், நான் இங்கு அடிக்கடி வருகிறதில்லையென முறையிடுகிருர். ஆகையால் நான் வரநேரும்பொழுது உங்களுக்கு யாதேனும் சில விஷயங்களைச் சொல்வது நலம். .....உங்களைப்போன்ற இளைஞர்கட்கு ஓர் விதத்திற் பாட்டியாராவேன். அவ்வுரிமைபற்றியே, நீங்கள் பிற்காலம் உங்கள் தாய்நாட்டுக்குழைக்க வேண்டிய காரியத்தில் இரண்டொரு புத்திமதிகளைக் கூறல் தகுமென்று நினைக்கின்றேன்.

அதிபிராசீனமதமாகிய இந்துமதத்தைச் சரிவரக்காப்பதினும் முக்கியமான காரியம் இந்நாட்டிலுள்ளோர்க்கு வேறில்லையென்பதை நீங்கள் அறிந்தவர்கள். ஆயினும் பண்டைக்காலத்தில் அம்மதம் எவ்வாறிருந்ததோ அவ்வாறே, அதில் அறிவூட்டக்கூடிய பாகம் இப்பொழுதும் விரிவடைந்து மேற்பட்டிருத்தல்வேண்டும். நமது நாட்டில் காசி முதலிய க்ஷேத்திரங்களில் ஒப்பற்ற கல்வித்திறமையும், ஆழ்ந்த அறிவும் உள்ள பண்டிதர்கள் பலரிருக்கின்றனர். பல ஜனங்களாற் புகழப்படும் மேல்நாட்டுவித்துவான்களினும், அவர்கள் மிக பாண்டித்தியமுடையவர்கள். ஆயி

---

* மாது ஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையவர்கள் சில நாளைக்கு முன் மிஸ்டர் C. P. ராமஸ்வாமி ஐயருடன் ராமகிருஷ்ணமிஷன் மாணவர்களின் வித்தியாகிருஹத்திற்குச் சென்றபோது ஆங்கு செய்த உபந்யாசச் சுருக்கம். அக்டோபர்மீ 21தேதி நியூஇந்தியா பத்திரிகையிலிருந்து ஆர். பஞ்சாபகேச ஐயரால் மொழி பெயர்க்கப்பட்டது.

னும் மேற்கூறிய நம் தேசத்துப் பண்டிதர்கட்கு 'நவீனகம்' (Modern Spirit) என்று சொல்லப்படுகின்ற தற்கால வியற்கையை யறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ளும் விஷயம் மிகப் பிரயாசையாயும் அருவருப்பாயு மிருக்கின்றது. ஆராய்ச்சி நுட்பத்தினாலும், நற்குணத்தினாலும், மாசற்ற வாழ்வினாலும் இத்தேசத்திலுள்ள படிப்பாளிகளையும் நவீனபுத்தியுள்ளோர்களையும், அவர்கள் மேற்கொண்டு நடத்த தகுந்தவர்களே. ஆயினும் இக்காலவியல்பினையுணராது நூதனப்போக்குள்ளவர்பால் அவர்கள் உபேக்ஷையாயிருப்பதாற்றான் இவர்கள்மீது நமது பண்டிதர்கட்கு ஓர் பிடிப்பின்றிப்போய்விட்டது.

பிராசீனமதத்தைச் சேர்ந்தும் இங்கு நவீனகல்வியைக் கற்றும் வருகின்ற நீங்கள் தகுந்த பருவமடையுங்கால், இந்நாட்டிற்குச் செய்யக்கூடிய தனிப் பெருங்கைங்கர்யம் ஒன்றுளது. பண்டைக்காலப்போக்கு சற்றேனும் மாறாத பண்டிதர்கள் உதாசீனஞ்செய்துவரும் நவீன அறிவாளிகளோடு நீங்கள் பழகிவருவதால் அவர்களிடம் நீங்கள் சென்று அவர்கட்குப்புலப்படாத விஷயங்களை யெளிதில் நீங்கள் அறிந்து, அவர்களது ஐயமகற்றலாம். ஏற்கனவே, நீங்கள் பிறந்திருக்கும் மதத்தின் மேன்மையைப்பற்றிச் சிறிது தெரிந்துகொண்டிருப்பீர்கள். அதன் கௌரவத்திற்குத் தகுந்தவாறே நீங்கள் நடந்துகொள்ளவும்வேண்டும்.

முற்காலத்திலிருந்தனவும், தற்காலத்திலிருக்கின்றனவுமான மதங்கள் எவற்றினும், நீங்கள் ஜனிக்கும்படி பாக்கியம்பெற்றிருக்கும் மதத்தைப்போல் அத்துணை பெருமை வாய்ந்த மதம் யாதொன்றும் உலகிலில்லை. ஆயினும் (புறக்

கடைப்பச்சிலையை அலக்ஷியம் செய்வதுபோல்) அம்மதத்திற்பிறந்திருப்பதனாலேயே அதன் உயர்வை நீங்கள் நன்குணர்கின்றீர்களில்லை. நாம் முயற்சியின்மேல் அடையும் பொருளையே வேகுவாய் மதித்துக்கொண்டாடுவது நமது தன்மையாகும். எளிதிற் கிடைப்பவற்றை இகழ்ச்சிசெய்வது நமக்கு சகஜம். நான் பற்பல மதங்களின் நூற்களைப் படித்து அவற்றிற்சிறிது அறிந்துளேன். அவற்றையெல்லாம் நான் பார்க்குங்கால் உங்களுடைய மதத்திலில்லாதது ஒன்றையும் ஏனைய மதங்கள் புதிதாய்க்கூறுவனவல்ல. வேறுமதம் யாவும் இந்துமதத்திலிருந்து சிலவற்றைக் கற்றுக்கொள்ளும்படியாகவே உள்ளது. இந்துமதம் அவைகளிடமிருந்து கற்கவேண்டியது யாதொன்றுமில்லை. இந்துமதம் மெய்யறிவிலும் நீதிநெறியிலும் பூர்ணம் பெற்றுளது. அஃது தெய்வீகம் பொருந்திய பெரியோர்களால், உலகிற்கு அளிக்கப்பட்டது. அப்பெரியோர்கள் பூமண்டலத்தில் பற்பலபடிகளிலுள்ள ஆன்மாக்களின் பக்குவத்தை (தேவைகளையும் அவாக்களையும்) அறிந்து அவற்றிற்கேற்ப உபதேசங்களையருளிச்செய்திருக்கின்றனர். (இம்மதத்தின் வாயிலாய்) இந்துமதத்தில் நமது சொந்தபுத்தியை எதிலும் உபயோகப்படுத்தப்படாது என்ற தடை கிடையாது. இந்துக்களாயுள்ள நீங்கள் எவ்வித ஆசரணையையும், எந்த மதத்தையும் எந்த தர்மத்தையும் அஞ்சாது விசாரணை செய்யலாம். எவ்வகையான உண்மைகளும் இம்மதத்தில் அடங்கியுள்ளன. ஏனெனில் கடவுள் எவ்வுயிரிடத்தும், எவ்வுயிரும் கடவுளிடத்தும் (நிலைபெற்றிருக்கும்) தங்கியிருக்கும் உண்மையைத் தெரிவிக்கும் மதம் இதுவே. சத்

தியம் என்பது கடவுளின் உருவாதலாலும், அவரிடமிருந்துதிக்கும் யாவும் அவரது பலவாய்த்திரிந்த உயிரின் எண்ணிறந்த ரூபங்களைக்காட்டுவதனாலும் நாம் தத்துவபரிசோதனைசெய்யும் விஷயத்தில் இந்துசமயம் நமக்குப்பூரண சுதந்தரமளிக்கின்றது. அத்தகைய (அறிவாண்மையை) புத்திகௌரவத்தை நீங்கள் அறிவீர்களாயின், உங்களுடைய தத்துவசாஸ்திரங்களாகிய (Philosophies) ஷட்தர்சனங்கள் (The Six Darsanas) ஓர் உயிரின் பலகூறுகள் (தோற்றங்கள்) என நீங்கள் உணர்வீர்களாயின், இவையனைத்தும் நமது உத்தமயூகத்திற்கு ஒத்தவைகளென்றும், இந்துமதத்தில் பக்திபரமாய் எழுதப்பெற்றிருக்கும் நூற்கள் நமது மனதில் ஊக்கமும் உருக்கமும் உண்டாக்கவல்ல குறைவிலாத் தகைமையுள்ளனவென்றும் நீங்கள் தெரிந்துகொள்வீர்களாயின், நீங்கள் எங்கிருப்பினும் யாதுசெய்யினும் உங்கள்மதத்தில் உங்கட்கு பக்தி ஒருக்காலும் குன்றாது. உங்கள் நம்பிக்கை அதன்கண் ஒருபோதும் மாறாது. இது (இந்துமதம்) பெரியாரின்மதிக்குமெட்டா எத்தகைய வினாவிற்கும் விடையளிக்கக்கூடியது. மனதிற்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் இனிமையையும் ஊட்டக்கூடியது. ஆதலின், ஏனைய சமயங்கள்போலன்றி இந்து சமயம் எதற்கும் அஞ்சி நிற்கத்தேவையில்லை.

உங்கள் முன்னோர்களது மதத்தைப்பற்றிய வுண்மைகளை நீங்களறிந்துகொள்வதுடன், நவீனகல்வியாலுண்டாகும் அறிவையும் சம்பாதித்துக் கொள்வீர்களானால் அவையிரண்டும் பளிங்கிற் பவளம் பதித்தது போலாகும். அந்த நவீன கல்வியோவென்றால் பிரஹ்ம வித்தையின்

ஓர் கூறு. அதன் தாழ்ந்த அம்சம். சமயங்கள் எவற்றினும் உயர்வான சமயத்தில் நீங்கள் சேர்ந்தவர்களென்பதை அடிக்கடி ஞாபகத்திற்கொள்வீர்களானல் சந்தேக புத்தி தோன்றுதற்குக் காரணமான நவீனகல்விக்கும் இந்நாட்டு மதத்திற்கும் முக்கிய ஆதாரமான ஆன்மவித்தைக்கும் ஓர் வாராவதியாக நீங்கள் அமையலாகும். இந்துக்களின் மதவிஷயங்களிலும் வித்தியாவிவகாரங்களிலும், சரீராபி விருத்திமுறைகளிலும் இத்தேசத்தில் முன்னரே உயர்வும், இலக்ஷணமும் வீரமும் பொருந்திய பிராசின அம்சங்களை வையோ அவற்றைத்திரும்பவும் உயிர்ப்பிப்பதைவிட உத்தமமான வேலை இந்நாட்டு இளைஞர்கட்குண்டோ? இல்லையே. எனெனில் இந்துமதமில்லாவிடின் இந்துதேசமில்லை; இந்துதேசமில்லாவிடின் இந்துமதமுமில்லை. ஆதலின் வாலிபர்களே, நண்பர்களே! பிற்காலத்தில் எங்களுடைய எண்ணம் நிறைவேறவேண்டுமாயின், எங்கள் மனோரதம் ஈடேற வேண்டுமாயின் ஆர்யபூமியாகிய இந்தியாதேசத்தினிடமிருந்து ஏனைய நாடுகள் (ஆத்மவித்தியாவிஷயத்தில்)எத்துணை உதவியைப்பெறுவதற்கு வேண்டி நிற்கின்றன!எத்துணைவேட்கையாய்க்காத்திருக்கின்றன என அறிந்த நாங்கள் வயோதிகர்களாய்விட்டபடியால் நாங்கள் இச்சரீரத்தைவிட்டுநீங்க வேண்டிவரும்பொழுது இந்துக்களாகிய நீங்கள் உலகிற்குபகாரிகளாகவும்,இந்தியாவிற்கு சற்புத்திரர்களாகவும் இருப்பீர்களென்ற திடநம்பிக்கை எங்கள்மனதிலுதிக்கும்படி நீங்கள் நடந்துகொள்வீர்களாக.

ஓம் தத் ஸத்.

R. பஞ்சாபகேச ஐயர்.

2.60

# சிறு விளக்கு. *

ஒருகாலத்தில் ஒருபையன் இரண்டு ரஸ்தாக்கள் சேர்ந்திருக்கும் ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தான். எந்தவழியாகப்போகிறதென்ற நிச்சயம் ஏற்படாததால் யோசித்துக்கொண்டே நீண்டகாலம் அங்கு நின்றுகொண்டிருந்தான். அப்போது முன்ஒருவர் தனக்குச்சொல்லியிருந்த விஷயம் ஒன்று அவன் ஞாபகத்திற்கு வந்தது. அதாவது இன்னது செய்கிற தென்றாவது இன்ன வழியில் பிரவேசிக்கிற தென்றாவது நமக்கு விளங்காம லிருக்கும்பொழுது நாம் அமைதியாகவிருந்து கவனிக்கவேண்டும்; அப்படிச் செய்வோமேயானால், "குழந்தாய், நான் உனக்கு ஒத்தாசை செய்கிறேன். உன்னுடைய விருப்பத்தைச்சொல்" என்னும் ஒரு சிறிய சப்தத்தைக்கேட்போம் என்றுஅவர் சொல்லியிருந்தார்.

மேற்சொன்ன அந்தச்சிறுவன் அதேமாதிரி காத்துக்கொண்டும் கவனித்துக்கொண்டும் ஊக்கமாகவுமிருந்தான். அவன் தன்னுடையவிருப்பத்தை மெதுவாகச்சொன்னான். அப்பொழுது அவனுக்குமுன்னே அழகிய வட்டவடிவமான விளக்கு ஒன்று தோன்றிற்று. ,,இதுதான்வழி" என்றசப்தம் அவனுக்குக்கேட்டது. அதன்படி அந்தவெண்மையான பிரகாசத்தைநோக்கிக்கொண்டேசென்றான். வேறோர் சிறுவிளக்கு அவன் பிசகிநடக்காமல் வழிகாட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டது. மறுபடி திரும்பிப் பார்க்காமலே சந்தோஷமாய்ப்போனான்.

தனக்குக் கொடுக்கப்பட்ட விளக்கை அந்தச் சிறுவன் ஒருபொழுதும் கைதவறவிடவில்லை. ஆகையால் அழியாத ஆநந்தத்தையே எப்பொழுதும் அனுபவிப்பதற்காகக் கடவுளாகிய ஒருபெருஞ்ஜோதிக்குள், அவன் சென்று கொண்டிருக்கிறான்.

இதைவாசிக்கும் சிறுவர்களே! அந்தவிளக்கு இன்னதென்பதை நீங்கள் ஊகித்து அறியக்கூடுமோ?

P. குமரப்ப செட்டி F. T. S.
ஆத்தங்குடி.

---

* Adapted from "The Lotus Buds' Journal" Auckland, New Zealand.

# கடம்பூர் ஸ்வர்ண மணிமாலைச் சங்கத்து ரிப்போர்ட்டு.

---

பெரியோர்களது அநுக்கிரகத்தால், சென்ற 1914-ம் ௵ நவம்பர்௴ 12௳ சனிக்கிழமையன்று இவ்வூர் (கடம்பூர்) கிங்ஜார்ஜ் எலிமெண்டரிஸ்கூல் மாணவர்களிற் பதினொன்றின்மர் கூடி, ஸ்வர்ணமணிமாலைச் சங்கம் அப்பாடசாலை உபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ, R. பஞ்சாபகேச ஐயர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. ரிஜிஸ்தரில் தாக்கல் செய்யப்பட்ட இச்சங்கத்தின் மெம்பர்களின் சங்கியை 11 (பதினொன்றே) ஆயினும், சுமார் 20முதல் 25 மாணவர்கள் பிரதி மீட்டிங்கிலும் ஆஜராகியிருந்து வந்திருக்கிறார்கள். இவர்களிற் பெரும் ஊக்கத்துடன் உழைத்தவர்கள் பதினைந்து பேரினர்க்குக் குறைவில்லை. ஏனையோர் மிகப் பாலியர்களே.

சனிவாரந்தோறும் சுமார் மாலை 3 மணிக்கு, பிள்ளைகள் ஒருங்கு சேர்ந்து, ஒருவரோடொருவர் கைகோத்துக்கொண்டு, "ஸ்வர்ணமணிக் கோவையின்," செய்யுட்களை ஏகோபித்துப்பாடி, குழந்தைகட்கெல்லாம் நற்சீலமும் நல்லறிவும் உண்டாகுமாறு மெம்பர்கள் கடவுளைப் பிரார்த்திப்பது வழக்கம். பிரதிமாதமும் மதுரை பிரஹ்மஞான சபையைச் சேர்ந்த பிரமஸ்ரீ B. S. ராமசுப்ப ஐயரவர்களால் மிகுந்த வன்போடு எழுதி வெளியிடப்படும் துண்டுப் புத்தகங்களைப் பிள்ளைகள் படிக்கவே, சங்கத்தின் காரியதரிசியானபாடசாலையின் உபாத்தியாயர் அவர்கள் அதைப் பலவுபமானங்களாலும் கதைகளாலும் விளக்கிக் காட்டி " நல்லுபதேசம் செய்வார். வேறு சின்னாட்களில் ஆர்ய மதோபாக்கியானம் மாதுஸ்ரீ அன்னி பெஸண்ட் அம்மையவர்களால் எழுதப்பெற்ற "இராமாயணம்,", "பாரதம்"

முதலிய நூற்களிலிருந்தும், பிரஹ்மக்ஞானசபை கிரந்தங்களிலிருந்தும், சுலபமும் சிலாக்கியமுமான பலவிஷயங்கள் எடுத்துப் போதிக்கப்படும். சற்றுப் பருவம் வந்த வாலிபர்களுக்கு ஆங்கிலத்தில் எளிதிற் கற்கக்கூடிய உயர்ந்த கருத்தமைந்தபாட்டுகளிற் பல கற்பிக்கப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளிற் பெரும்பாலரும்ஸ்ரீமான் ஸ்ரீ வி.ஜினராஜதாசர் அவர்களுடைய சிறு கிரந்தங்களிற் பெரும் பற்றுதல் காட்டிவருகின்றனர். ஒவ்வோர் சமயங்களில், தமிழ்ப் பாசுரங்கள், பட்டணத்துத் திருவடிகள், மாணிக்கவாசகஸ்வாமிகள், இராமலிங்க சுவாமிகள் இவர்களுடைய பாடல்களும் போதிக்கப்படுகின்றன. ஆயினும் பிற் கூறியவை மிகச் சொற்பமேயாம்.

ஸ்வர்ணமணிக் கோவைகளின் முதன்மையான லக்ஷியம், ஒழுக்கம், அன்பு, பரோபகார புத்தி முதலியன பிள்ளைகளிடம் அமையப் பெறவேண்டுமென்பதே யாதலால், அவ்வித நோக்கம் நிறைவேறுமாறு அவர்கட்கு ஏற்ற உபதேசம் பிரதிதினமும் அளிக்கப்பட்டு வருகின்றது. அதன் பயனுய் இச்சங்கத்தின் மெம்பர்கள் ஒவ்வொருவரும் பிரதிதினமும் இரண்டு பரோபகார செயல்களுக்குக் குறையாது செய்து வருகின்றனர்

சென்ற பிப்பரவரிமீ 24உ இவ்வூர் (கடம்பூர்) நாடார் சங்கத்தின் 3-ம் வருட பூர்த்தி கொண்டாடப்பட்ட பொழுது எங்கள் சபைக்கு மிகவும் அபிமானியான மதுரை பிரஹ்மஸ்ரீ B. S. ராமசுப்ப ஐயர் அவர்கள் "அன்பு" 'ஜீவகாருண்யம்' முதலியவைகளைப் பற்றி அரியதோர் உபந்நியாஸம் செய்தார். அது சமயம் அக்கிராசனம் வகித்த மதுரை பிரஹ்மஸ்ரீ கல்கத்தா ராமசந்திர ஐயர் அவர்கள் ஒழுக்கத்திலும் பரோபகாரத் தன்மையிலும் சிறந்த மூன்று ஸ்வர்ணமணிகளுக்கு உயர்ந்த பரிசுகளை அளித்தனர். அதன் பின்னர், மார்ச்சு மாதத்தில் நூற்றுக்

குடி ச்றசனசபை காரியதரிசியான ஸ்ரீமான் சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் "மாணவர் இலக்கணம்" என்பதைப் பற்றியும், மேமாதத்தில் பிரஹ்மக் ஞானசபை மெம்பரும் கோயம்புத்தூர் ரிடையர்ட் தாசில்தார் அவர்களுமான ஸ்ரீமான் நெல்லையப்ப பிள்ளை அவர்கள் "ஒழுக்கம்", "உதய திசை நக்ஷத்திர சங்கம்" என்னும் விஷயங்களைப் பற்றியும் எங்கட்கு விளங்குமாறு பிரசங்கித்தனர். ஸ்வர்ணமணிகளிற் சிலர் லோககுருவின் வரவை உத்தேசித்து மாலை தோறும் 4 30 மணிக்கு போர் ஜெபம் புரிந்து வருகின்றனர் இவ்வருடத்தில் கோவையின் மீட்டிங்குகள் 30தான் (முப்பது) நடைபெற்றன. ரெஜிஸ்தர்படி, இவ்வூர் ஸ்வர்ண மணிச் சங்கம் ஏற்பட்டு ஓர் ஆண்டே ஆயினும்,—இஃது மிஸ்டர் எர்நஸ்டு உட் பிரஹ்மஸ்ரீ P. R. சுந்தரராஜ ஐயர் இவர்களுடைய அநுக்கிரஹத்தாலும், பிற்காலத்தில் மதுரை பிரஹ்மக்ஞான சபையினைச் சேர்ந்த பிரஹ்மஸ்ரீ B. S. ராமசுப்ப ஐயர் அவர்களது ஊக்கம் வாய்ந்த உதவியாலும் நெடுங்காலமாய் நடைபெற்று வருகின்றது. மேற்கூறிய எங்கள் மூத்த சகோதரர் எல்லோரும், அவர்கள் செய்த உதவியின் பொருட்டு, இப்பொழுது எங்கள் மனதுணர்ந்த வந்தனங்களை அளிக்கின்றோம். மேல் வருடத்தில், இதனினும் சீராயும் சிறப்பாயும் எமது சங்கம் நடைபெற்று, ஸ்வர்ணமணிகள் யாவரும் நற்காரியங்களில் எக்காலத்தும் ஈடுபடும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை யாம் பிரார்த்திக்கின்றோம்.

ஆர். பஞ்சாபகேச ஐயர்,

கார்யதரிசி.

---

264

## புத்தகதரவு.

விஷ்ணுஸ்தல மஞ்சரி:—இது யாத்ரிகர்களுக்கு மிகவும் பிரயோஜநமாயிருக்கும். இதில் விஷ்ணு ஸ்தலங்களின் பிரபாவங்களும், அத்தலங்களை யடைதற்குரிய மார்க்கங்களும், அங்கங்கேயுள்ள வஸதிகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இது 112 பக்கங்க ளடங்கிய, டிம்மி $\frac{1}{8}$ சைஸோடு கூடினது. இதன் விலை அணு 8. அந்தந்த ஸ்தலங்கள் சம்பந்தமான பாடல்களும், புராண வரலாறுகளும் இப்புத்தகத்தில் ஸங்கிரஹமாய்க் கூறப்பட்டுள்ளன. வேண்டுவோர் "யம். வி. பட்டாபிராம முதலியார், கிளர்க்கு, லோகோ சூபெரிண்டெண்டெண்ட் ஆபீஸ், மதராஸ் அண்டு ஸதெரன் மராட்டா ரயில்வே கம்பெனி, பெரம்பூர், மதராஸ்" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

முதுமொழிக் காஞ்சியும், மூதுரை நல்வழியும்:—முதுமொழிக் காஞ்சியென்பது மதுரைக் கூடலூர் கிழாரால் இயற்றப்பெற்றது. மூதுரையும், நல்வழியும் ஔவையாரால் அருளப் பெற்றனவாகும். தமிழ் கற்கத் தொடங்குவோர் முதன்முதல் பயிலவேண்டிய இச்சிறு நூல்களின் அரும் பெருந்தகைமை அளவிறந்தது. இதை நாட்டுக்கோட்டை நகரத்தாரில் ஒருவராகிய ராம. கும. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் ஆயிரக் கணக்காக அச்சிட்டு வேண்டுவோர்க்கு இனமாகக் கொடுத்துத் தமிழ்ப்பாஷையை அபிவிருத்தி செய்து வருகிறார். இது கோனாப்பட்டு தனவைசியன் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

இப்புத்தகத்தை அடியிற் கண்டவர்களிடம் விலையின்றி நேரே பெற்றுக்கொள்ளலாம். அயலூர்களிலுள்ளவர்கள் தபாற்செலவு ஒரு பிரதிக்கு அரையணாவும், அதற்குமேற் பிரதி யொன்றுக்குக் காலணா வீதமும் அனுப்பவேண்டும்.

புத்தகம் கிடைக்கும் இடங்கள்:—

(1) "கார்யதர்சி, ஞான ஸம்பந்த நற்சபை,
கோனாபட்டு, புதுக்கோட்டை ஸ்டேட்."

(2) "ராம. கும. சு. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள்,
பலவான்குடி, இராமநாதபுரம் ஜில்லா.

• ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை:–அமிழ்தினுமினிய நம்தமிழ்மொழியைக்கற்பாரும் ஆதரிப்பாருங் குறைந்திருக்கும் இந்நாளில், கோநகர்—பெ. அ. லெ. அண்ணாமலைச் செட்டியாரவர்கள்பொருளுதவியால்வெளியாகி,இனமாகக்கொடுக்கப் பட்டுவரும் இச்சிறு புத்தகத்திற்காக, நாம் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேம். நமது பள்ளிப்பிள்ளைகள் தம் நன்னடக்கையை விருத்திசெய்து கொள்வதற்கேற்ற சில ஹிதவசநங்களும் இப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ளன. அதைப் பாடம்பண்ணி மநத்தில் ஞாபகம்வைத்திருக்கும் பிள்ளைகளின் நடக்கை நிச்சயமாகவே சற்றேனும் சீர்திருந்தும். ஏனெனில் நம் நடக்கைக்கெல்லாம் முதற்காரணம் நமது எண்ணங்களல்லவா? அவ்வசனங்கள் பின் வருமாறு:—

1. காலையில் எழுந்து கடவுளைப் போற்று
2. கால்கை கழுவிப் பால்போல் நீறணி
3. கற்ற பாடத்தை முற்றவும் சிந்தைசெய்
4. காலத்திலுண்டு கலாசாலை சேர்ந்து கல்
5. வழியிற் பிறரொடு விளையா டாதே
6. ஆசான் சொல்வதை அடக்க முடன்கேள்
7. கேட்ட பாடத்தை மீட்டும் படித்துணர்
8. உடன் படிப்போருடன் ஒற்றுமையா யிரு
9. புத்தகங் கிழியாது வைத்துப் பேணு.
10. நித்தங் குளித்துச் சுத்தமா யிரு
11. உடையொரு சிறிது மழுக்கடை யாதுவை
12. யாவ ருடனும் இன்சொற் பேசு
13. கடுஞ்சொற் சொல்லிற் கண்டோர் பகைப்பர்
14. கெட்ட பழக்கம் சற்று மொட்டாதிரு
15. புத்தகஞ் சுவரிலை பொலன்கெடக் கேதேல்

16. உண்மையும் நேர்மையும் உறற் பாலனவே

17. சீவ காருண்ணியம் சிறந்த வொழுக்கம்

18. தந்தையும் தாயும் வந்தனைக் குரியார்

19. குருவை வழிபடல் பெரிய கடமை

20. ஒழுங்குடன் கருமமே கண்ணு யொழுகு

21. கடவுளை நினைந்து கற்றபடி நட.

இப்புத்தகம் அடியிற் கண்டவர்களிடம் விலையீந்திப் பெற்றுக் கொள்ளலாம்.

(1) மானேஜர்,
கற்பக விநாயக கலாசாலை
கோனபட்டு,
புதுக்கோட்டை இலாகா.

(2) பெ. அ. லெ. அண்ணாமலைச்
செட்டியாரவர்கள்,
கோனபட்டு,
புதுக்கோட்டை இலாகா.

அயலூர்களிலுள்ளவர்கள், தபாற்செலவு அரையணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

---

இந்தியமாதர் சரித்திரம்:—இது கிரௌன் $\frac{1}{8}$ ஸைஸில் 102 பக்கங்களடங்கிய ஓர் புத்தகம். இதன் பொருளடக்கம் பின்வருமாறு:—இந்தியாவின் அமைப்பு, ஆரியர்கள், வாக்கு தேவஹூதி, மைத்ரேயீ, கார்கீ, ஸீதா, த்ரௌபதி, ஸுஜாதா, யசோதரா, காஞ, லீலாவதி, அரேபியாவும், மஹம்மதியர்களும், ஸம்யுக்தா, ரீஜியா, பத்மினீ, பாமினீராஜ்யம், தாராபாய், பண்ணு, துர்க்காவதீ, சார்த்பீபி, இத்தனை விஷயங்களும் அழகாயும் சுருக்கமாயும் எளிய

தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. நம் நாட்டுப் பெண் மணிகளுக்கு இது ஓர் அவசியமான புத்தகம். இதிலடங்கிய விஷயங்களின் சிறப்பை உத்தேசிக்க, இதன் விலை அணா 5 அதிகமல்ல. வேண்டுவோர் ஆர். திருமலை அண்டு கம்பெனி, 114. பவழக்காரத் தெரு, மதராஸ், என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

சாணக்ய ஸாஹஸம் என்னும் சந்திரகுப்த சரித்திரம்:—இது டாக்டர் A. R. வைத்தியநாத சாஸ்திரியார் எம். ஏ., எம். பி. ஸி. எம். அவர்களின் குமாரத்தியாகிய ஸ்ரீமதி பாலம்மாள் இயற்றியது. டிமி ஆக்டவோ ஸைஸில் 192 பக்கங்கள் கொண்ட ஓர்புத்தகமிது. இது நமது பிராசீன நூல்களில் ராஜ தந்திரங்களைப் பற்றிய "சாணக்ய தந்த்ரம்" என்னும் நூலை அநுஸரித்து எழுதப்பட்டிருக்கும் ஓர் சரித்ர ஸம்பந்தமான நாவல். இதை யெழுதிய மாது சிரோமணிக்கு ஸமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சியுமுண்டு. "நாவல்" என்பதன் லக்ஷணங்கள் ஒரு சிறிதும் அமையாத நாவல்களே இப்போது அதிகமாய் வெளியாகின்றன. சிருங்கார ரஸம் என்ற வியாஜத்தில், விரஸமான கல்பனைகளும் வர்ணனைகளுமே தற்காலத்துப் போலி நாவல்களில் காணப்படுகின்றன. இவ்விதக் குறைபாடு சற்றுமின்றி, நேர்த்தியான இனிய செந்தமிழில், ஆங்காங்கு நயமான ஸம்ஸ்கிருத பதங்களுடன் நடையானது ஸரளமாய் விளங்குகின்றது. விஷயமும் படிப்போர் மனங்களில் பசுமரத் தாணிபோற் பதியுமாறு வரையப்பட்டுள்ளது. நம் நாட்டுக்கலாசாலைகளிற் கூட இத்தகைய புத்தகம் கற்பிக்கப் படும்படி, வித்யா இலாகாவானது சிரத்தை யெடுத்துக் கொண்டால், நந் நாட்டுச் சீர்திருத்தத்திற்கு அது ஒரு எற்றபடியாகும், இப்புத்தகத்தின் விலை ரூ-1 தான். வேண்டுவோர் மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்ராஸநாதிபதி பண்டித ம. கோபாலகிருஷ்ண ஐயரவர்களுக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

2-68

## சமாசாரம்.

---

ஸ்வர்ணமணி மாலைக் கிளைச் சபைகளுக்கு ஓர் அறிவிப்பு:— சென்ற ஒரு வருஷத்தில் இதன் கிளைச்சபைக் காரியதரிசி ஒவ்வொருவரும், அவரவர் வறுதிக்குட்பட்ட சங்கங்கள். நந் தமிழ்நாட்டுச்சிறுவர்களுக்கெவ்விதம் உழைத்து வந்திருக்கின்றன என்னும் விவரத்திற்கும், ஸ்வர்ணமணிப்பிள்ளைகளுடைய நன்னடக்கையை எவ்விதம் இச்சங்கங்கள் சீர்திருத்தி வந்திருக்கின்றன என்பதற்கும் ஓர் அறிக்கைப்பத்திரம்(Report)எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறேன். ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தின் வருஷோற்சவம் அதிசமீபகாலத்தில் நடைபெற வேண்டியிருப்பதால், தயவு செய்து ரிப்போர்ட்டைச் சீக்கிரம் தயாரித்தனுப்புவது உசிதமாயிருக்கும்.

(B. S. ராமசுப்பையர்)

## விளம்பரம்.

---

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் பிரசுரமாகும் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்குப் பெரும்பான்மையும் தமிழிலக்கிய இலக்கண விஷயங்களும், தமிழ் நாட்டுப் புராதன சரிதங்களும், சாஸனங்களும், வடமொழியினும் ஆங்கிலத்தினும் தமிழிற்கு வேண்டுவன வாகக் கருதப்படும் சாஸ்திரமொழி பெயர்ப்புகளும், ஒன்றையொன்றி கழாச் சமயக் கொள்கைகளும் தமிழின் அருமை பெருமைகளைக் காட்டும் ஆராய்ச்சி விஷயங்களுமாகிய விஷயதானம் செய்வோர்க்கு, 'செந்தமிழ்'ப்பக்கம் 1-க்கு வியாஸத்துக்குத் தக்கவாறு 8 அணு முதல் 2 ரூபாவரை ஸம்பாவனை கொடுக்கப்பெறும். இந்த ஸம்பாவனை வியாசங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டுப் பிரசுரமான பிறகே எழுதிய கிருபருக்கு அனுப்பலாகும். ஏற்றுகொள்ளப் படாத விஷயதானங்களை கிருபர்களுக்குத் திரும்பத் தேவையாயிருந்தால் அவர்கள் தபாற் செலவிலேயே அனுப்பப்பெறும்.

B. இராஜராஜேஸ்வர ஸேதுபதி,

அக்கிராசநாதிபதி,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

269

# கீதாஞ்சலி. *

இருள் அதிகமாகிக்கொண்டு வந்தது. எங்கள் பகல் வேலைகளெல்லாம் பூர்ணமாய் முடிந்துவிட்டன. வெளியே சென்றிருந்து வீட்டிற்கு வரவேண்டியவர்களெல்லோரும் வந்து கிராமத்திலுள்ள வீடுகளின் கபாடங்கள் மூடியாகி விட்டனவென்று நினைத்தோம். "அரசன் வரப்போகிரு னென்று" சிலர் சொல்லிக்கொண்டார்கள். நாங்கள் சிரித்து, அது உண்மையாக விருக்கமுடியாதென்று சொன்னோம்.

கதவைத் தட்டின சத்தம் எங்களுக்குக் கேட்டது. நாங்கள் எல்லோரும் அதைக் காற்றின் சப்தமென்று சொன்னோம். விளக்கை அணைத்துவிட்டு நித்திரைசெய்ய ஆரம்பித்துவிட்டோம். அது "ஒரு தூதனாக" இருக்க வேண்டுமென்று சிலர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் பரிகாசம் செய்து "இல்லை அது காற்று என்று" சொன்னோம்.

பாதி இராத்திரியில் ஒரு சப்தம் கேட்டது. அதை வெகுதூரத்தில் முழங்குகிற சப்தமென்று தூக்கக்கலக்கத்தில் நினைத்தோம். அச்சத்தத்தால் பூமி அசைவுற்று சுவர்கள் அசைந்தன. எங்கள் தூக்கத்தைக் கெடுத்துவிட்டது. சிலர் அதை வண்டிச்சக்கரத்தின் சப்தமென்று சொன்னார்கள். இல்லை அது மேகத்தின் முழக்கமாகவிருக்குமென்று நாங்களெல்லோரும் நித்திரை மயக்கத்தில் முணுமுணுத்தோம்.

---

* Adapted from the "Brothers of the Star" Adyar, Madras.

தப்பு அடிக்கும் சப்தம் கேட்டது. அப்பொழுதும் இருளாகவேயிருந்தது. ''எழுந்திருங்கள்'' ''தாமதியாதீர்கள்'' என்ற சப்தம் உண்டாயிற்று. நாங்கள் எல்லோரும் எங்களுடைய இருதயங்களில் கையைவைத்து அமுக்கிக்கொண்டு பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தோம். ''இதோ பார் அரசனுடைய கோடி யென்று'' சிலர் சொன்னார்கள். எங்கள் பாதங்களை நுனியில் ஊன்றிக்கொண்டு எட்டிப் பார்த்துவிட்டு தாமதிக்க நேரமில்லையென்று கத்தினோம். ''அரசன் வந்துவிட்டார். விளக்கு எங்கே? தோரணங்கள் எங்கே? அவர் உட்காருவதற்குச் சிம்மாசன மெங்கே? ஆ! வெட்கம், மகாவெட்கம், அவர் தங்குவதற்குக் கூட மெங்கே? நீங்கள் பேசுவதெல்லாம் வீண் இறைச்சல். வெறுங்கையோடு போய், அவருக்கு நல்வரவுகூறி அவ்வரை உங்களுடைய வெற்று அறைக்குக் கூட்டிச்செல்லுங்கள், கதவைத்திறவுங்கள். சங்குநாதம் முழங்கட்டும். அந்தகாரம் நிறைந்திருக்கும் நம்முடைய பாழ்வீட்டிற்கு, அதிபனான அரசன் நடுச்சாமத்தில் வந்திருக்கிறார். ஆகாயத்தில் இடிமுழங்குகிறது. உங்களுடையகிழிந்த பாயைக்கொண்டு வந்து முற்றத்தில் விரியுங்கள். திடீரென்று புயலோடு பயங்கரமான இரவிற்கு அதிபனான நமது அரசனும் வந்துவிட்டார்.''

P. குமரப்பசெட்டி.

ஆத்தங்குடி.

# தியானக்கிரம விஷயம்.

---

## செப்டம்பர் மாசம்.

மாசாந்தர அப்பியாசம்:—:—வார்த்தை ஒவ்வொன்றையும் கவனித்துப்பேசு.

### வார அப்பியாசம்.

1-வது வாரம்:—பேசுவதற்குமுந்தி நன்ருய் ஆலோசி.

(a) உன் பேச்சு உண்மையும், பக்ஷமும், உபகாரமுமானதா ?

(b) இப்போர்க்கொத்த சந்தர்ப்பங்களில் குருநாதர் என்ன சொல்வார் என்பதை நன்ருய் ஆலோசி?

(c) இல்லாவிட்டால் சொல்லத்தகாததை நீ தவறிச் சொல்லிவிடக்கூடும்.

2-வது வாரம்:—சொற்பப் பேச்சுடன் நிற்பது நல்லது.

நேரே விரும்பினலன்றி அபிப்பிராயம் கொடாதே.

3-வது வாரம்:—கருத்துவேறு, வார்த்தை வேறென்று ஒருவரையும் நினையாதே; அவனது எண்ணங்கள் அவனுடைய குருநாதனுக்குத் தெரியும். அவனுடைய செய்கைகளுக்கு நீ நினையாத காரணங்களிருக்கலாம்.

4-வது வாரம்:—எவரைப்பற்றியாவது ஏதாவது சமாசாரம் கேட்டால் நீ அதை வெளிப்படுத்தாதே; அது பொய்யாயிருக்கலாம். நிஜமாயிருந்தாலும்கூட, அதைப் பற்றி நீ ஒன்றும் பேசாமலிருப்பது நல்லது; எக்காரணத்

தைக்கொண்டும் மூன்றும் மனிதனிடம் நீ போய் அதைப் பற்றி அலப்பவேண்டாம். அது ஒரு தீய பாபச்செய்கை யாயிருக்கிறது.

5-வது வாரம்:—இதர மனிதர்களுடைய காரியங்களில் அநாவசியமாய்த் தலையிடத்தூண்டும் விருப்பத்தை நீ கண்டிப்பாய் அடக்கிவிடவேண்டும்.

அடியில் கண்ட விதமான விஷயங்களில்தவிர, உன் சொந்தக்காரியத்தைக் கவனி. மௌனமாகிற நற்குணத்தை நீ கற்றுக்கொள். விலக்கு விஷயங்கள்:—

(a) ஒரு குழந்தையையாவது ஒரு மிருகத்தையாவது யாராவது உபத்திரவம் செய்வதை நீ பார்த்தால்,

(b) எவனுவது ராஜாங்க சட்டத்துக்கு விரோதமாய் நடப்பதை நீ பார்த்தால்,

(c) உன்னிடம் கற்க, வேறொருவன் உன் கீழ் வருவானுகில்,

கருதிச்செய்யுங் கொடுஞ்செயலை ஒழிக்கவேண்டுமென்று சமயம் நேரிடும்பொழுது நீ தெளிவாய்ப் பிறர்க்கு எடுத்துரைக்க வேண்டும்.

## தினசரி அப்பியாஸம்.

1. பேசுவதற்கு முந்தி நன்றாய் ஆலோசி.

2. உன் பேச்சு உண்மையும், பக்ஷமும் உபகாரமுமானதுதானு வென்று கவனி.

3. இவ்வித சந்தர்ப்பங்களில் குருநாதன் என்ன சொல்வார் என்று அடிக்கடி சிந்தித்துப்பார்,

4. இதுமுதலே, நீ பேசுமுன் விழிப்புடன் ஆலோசித்துப் பேசும் வழக்கத்திற் பயிலுவது நல்லது. ஏனெனில் தத்துவோபதேச தீக்ஷை பெற வரும் சமயம் உனது வார்த்தை ஒவ்வொன்றையும் நீ கவனிக்கவேண்டிவரும். இல்லாவிட்டால் சொல்லக்கூடாததை நீ தவறிச் சொல்லிவிடக்கூடும்.

5. திட்டமாய் உரைக்காததால் அசத்தியத்திற்குள்ளாகாதிருக்கும்பொருட்டு, நீ எப்போதும் நன்றாய் ஆலோசித்துப் பேசு.

6. அந்தப் பேச்சு வம்புப்பேச்சாய்விட்டால்,பாபகாமாகிறது.

7. சூக்ஷ்ம சரீரம் (அதாவது காம சரீரம்) அநேக ஆசைகளுடன் கூடியது. உன்னைக் கோபம் கொள்ளும்படியாகவும்,கொடிய வசனங்களைப் பேசும்படியாகவும், மாத்ஸரியங்கொள்ளும்படியாகவும், பணத்தில் பேராசை கொள்ளும்படியாகவும், மற்றவர்களுடைய பொருள்களைக்கண்டு அசூயை அடையும்படியாகவும், நீ மனக்கிலேசத்திற்குட்படும்படியாகவும் அது விரும்பும்.

ஆனல் அவைகளொன்றும் உனக்கு (நிஜமான ஆத்மாவுக்கு) அவசியமில்லை.

8. சொற்பப்பேச்சுடன் நிற்பது நல்லது.

9. நீ பேசவிரும்புவது சத்தியமாயும், பிரியமாயும் பிரயோஜனமுள்ளதாயுமிருக்குமென்று முற்றிலும் நிச்சயமாயிருந்தாலொழிய, மௌனமே நல்லது.

2 14



10. மற்றையோர்களைக் காட்டிலும் சமர்த்தனாகப் பிறர் உன்னைக் கருதவேண்டுமென்றுவது, உலகிற் புகழ் பெறவாவது நடிக்க இச்சிக்காதே, பேச ஆசைப்படாதே.

11. மிக்க சாதாரணப்பேச்சு அநாவசியம். அது மூடத்தனமுமாம். அது வம்புப்பேச்சாய்விட்டால், பாப கரமாகிறது.

12. ஆகையால் பேசுவதைவிடக் கேட்கப்பழகு.

13. நேரேவிரும்பினாலன்றி நீ அபிப்பிராயம் கொடாதே.

14. அறிதல், துணிதல், தீர்மானித்தல், மௌனமாயிருத்தல், இவைகளைச் சாதனங்களாகச்சொல்வதும் ஒரு முறை:—இந்நான்கில் கடைசியானது எல்லாவற்றிலும் கஷ்டமானது.

15. பிறர் செய்யும் எக்கார்யத்திற்கும் நீயாக ஒரு காரணங் கற்பிக்காதே.

16 இன்னொரு மனிதன் என்ன செய்தாலென்ன. என்னசொன்னாலென்ன, எவ்வித அபிப்பிராய முள்ளவனானாலென்ன. இவைகள் உன்னுடைய காரியங்களல்ல. அவைகளில் ஒருவிதத்திலும் சம்பந்தப்படாமல், நீ இருக்கப் பயிலவேண்டும்.

17. ஒருவன் வேறொருவனோடு தலையிட்டுக்கொள்ளாதவரையில் தன்னிஷ்டப்பிரகாரம், அவனுக்கு நினைக்கவும், பேசவும், செய்யவும், பூர்ணஸ்வாதீனமுண்டு. அவனைக் குறித்துப் பேச உனக்குப் பாத்தியமில்லை.

18. கொடுமையென்பது செய்கையில் மாத்திரமல்ல, வாய்ப்பேச்சிலு மிருக்கிறது. வேண்டுமென்றே வேறொரு ஜீவஜந்துவுக்கு உபத்திரவஞ் செய்வது கருதிச்செய்யும் கொடுஞ்செயலாம்.

19. சில சமயங்களில் கவனியாது சொல்லுமொரு வார்த்தை, வர்மத்துடன் சொல்லிய வார்த்தைபோல் துன் பத்தை விளைவிக்கின்றது. ஆகையால் அறியாமல்கூட, உன்னைக் கொடுஞ்செயல்களுக் குட்படுத்திக்கொள்ளாது, ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

20. எதைக் குருநாதன் சொல்லமாட்டார் என்று நீ நினைக்கிறாயோ அதை ஒருபொழுதும் நீயும் சொல்லக் கூடாது.

21. உன் மூலமாய், ஈசுவரானுக்கிரஹ அன்பு, உன் உடனொத்த மற்ற மனிதர்களுக்கும், பெருகும்படி நீ ஒரு வாய்க்காலா யேற்படவேண்டும்.

எவனைப்பற்றியாவது நீ ஏதாவது சமாசாரம் கேட் டால், நீ அதை வெளிப்படுத்தாதே. அது பொய்யாயிருக் கலாம். நிஜமாயிருந்தாலும்கூட அதைப்பற்றி நீ ஒன்றும் பேசாமலிருப்பதே நல்லது.

23. நீ ஒருவரைப்பற்றியும் கெடுதலாய்ப் பேசாதே.

24. ஒருவனைப்பற்றி வேறொருவன் கெடுதலாகப் பேசினாலும் செவிகொடுத்துக்கேளாதே.

25. "ஒருவேளை நிஜமில்லாமலிருக்கலாம். அப்ப டியே நிஜமாயிருந்தாலும் அதைப்பற்றிப் பேசாமலிருப் பது நல்ல"தென்று மிருதுவாய்ச் சொல்.

26. நீயாராவது ஒருவனைப்பற்றி எதையும் கேள்விப்பட்டால் அதைப்பற்றி வேறொருவனிடம்போய் வீணாய் அலத்தாதே. அது முற்றிலும் கெட்ட காரியம். வம்புப் பேச்சு அன்புக்கு விரோதமான பாபச்செய்கை.

27. உன்னுடைய பேச்சு உண்மையானதாகவும் திட்டமானதாகவும், பெருக்கிக் கூறாமலும், உள்ளதை உள்ளபடியே கூறவேண்டும்.

28. ஈசுவரபக்தியை உத்தேசித்தே, சமயம் நேரிடும் பொழுது, இவ்வித கருமங்கள் கூடாவென்று நீ தெளிவாய் எடுத்துரைக்கவேண்டும். (கருதிச்செய்யும் கொடுமை) உடற்கூறுசாஸ்திர பரீக்ஷகர்கள் இதைச் செய்கிறார்கள். அநேகம் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் இதை வழக்கமாய்ச் செய்கிறார்கள்: அவ்விதமே வேட்டை விளையாட்டென்று சொல்லி, புத்திபூர்வமாய், ஈசுவர சிருஷ்டிகளாகிய ஜீவஜந்துக்களைக் கொல்கிறார்கள்.

29. இதரமனிதர்களுடைய காரியங்களில் அநாவசிமாய்த் தலையிடுகிற இன்னொரு சாதாரண விருப்பத்தை நீ கண்டிப்பாய் அடக்கிவிடவேண்டும்.

உன் சொந்தக்காரியத்தைக் கவனி. மௌனமென்கிற நற்குணத்தை நீ கற்றுக்கொள். (இதர விலக்கு விஷயங்களைப்பற்றி வார அப்பியாசத்தில் பார்.)

30. "ஒரு மனிதன் எதைச் செய்திருக்கின்றானோ அதை மற்றொருவனும் செய்யக்கூடும், நானும் ஒரு மனிதன். மேலும் மனிதனில் ஈசுவராம்சமுள்ளவனாயு மிருக்கிறேன். என்னாலிக்காரியம் செய்யக்கூடும். நான் செய்வேன் என்று அடிக்கடி உன் மனத்திற் திடங்கொள்வாயாக.

(இன்னும் வரும்.)

K. S. ராமச்சந்திர ஐயர்.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத்

தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார். பி. ஏ.,

# இயற்றிய நூல்கள்.

277

---

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| 1. | தமிழ்மொழிவரலாறு—(காலிகோ) | 2—0—0 |
| 2. | ரூபாவதி அல்லது காணாமற் போன மகள் | 1—0—0 |
| 3. | கலாவதி ஓர் புதிய தமிழ் நாடகம். | 1—8—0 |
| 4. | நாடகவியல் (ஓர் நாடகத் தமிழிலக்கண நூல்.) | 0—8—0 |
| 5. | தனிப்பாசுரத் தொகை. (முதற் பகுதி) | 0—4—0 |
| | (ஜி. யு. போப் ஐயரவர்களால் ஆங்கில பாஷையிற் செய்யுளாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது கலிகோ பயிண்டு) | 1—0—0 |
| 6. | பாவலர் விருந்து (செய்யுள் நூல்கள் கொத்து.) | 0—8—0 |
| | ஷை காலிகோ | 1—0—0 |
| 7. | மதிவாணன் (புதுவதுபுனைந்ததோர் செந்தமிழ்க்கதை) | 0—8—0 |
| | ஷை (துணியட்டை யிட்டது.) | 0—12—0 |
| 8. | மான விஜயம் (செய்யுள் நாடகம்.) | 0—8—0 |
| 9. | ஸ்ரீமணிய சிவனார் சரித்திரம். | 0—4—0 |
| 10. | மதுரைமாலை (ஸ்ரீஸபாபதி முதலியாரவர்கள் இயற்றியது) | 0—1—6 |

---

ஸ்ரீதேவாபி மருகுருநாதர் தோத்திரத் திரட்டு:— ஹிமாசலத்தின் கண் வெள்ளியம்பலத்தில் வீற்றிருக்கும் இவ்விரண்டு மஹரிஷிகள் பேரில், திருநெல்வேலியம்பதிச் சிந்துபூந்துறை தக்ஷிணாமூர்த்தி ஆசிரமவாஸி M. வேதநாயக ஸ்வாமிகள் இயற்றியது. இதன் விலை அணா ஒன்றுதான். தபாற்கூலி வேறு 0—0—6. இது பிரஹ்மஞான ஸபையார்களுக்கு முக்யமானது. செய்யுட்களும் மிகவழகாய் அமைந்துள்ளன.

இவைகளை அடியிற்கண்ட விலாஸதாருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்.

தியாஸாபிகல்ஹால்,

மதுரை.

# தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

| | ரூ. அ. ப |
|---|---|
| 1. வேதாந்த சூளாமணி | 1—4—0 |
| 2. பதஞ்சலியோக சூத்திரம் | 1—0—0 |
| 3. இயேசு கிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல் | 1—0—0 |
| 4. மாதுஸ்ரீ அங்கிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் | 0–12—0 |
| 5. மனிதன் வமிசாவளியின் உண்மை | 0—8—0 |
| 6. பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | 0—6—0 |
| 7. ஔவையோகக்குறள் (தமிழினின்று ஆங்கிலமொழிபெயர்ப்பு) | 0—4—0 |
| 8. ஸர்வசமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம் | 0—4—0 |
| 9. இந்துமத தூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| 10. மௌனவாக்கு | 0—2—0 |
| 11. ஸன்மார்க்க தீபம் | 0—2—0 |
| 12. மாதுஸ்ரீ அங்கிபெஸண்ட் அம்மையார் சரித்திரம் (படத்துடன்) | 0—1—0 |
| 13. மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 14. எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 15. காயத்ரீ | 0—1—0 |
| 16. காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழ்மொழி பெயர்ப்பு) | 0—1—0 |
| 17. மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் சரித்திரம் | 0—0—6 |
| 18. ஹிந்து என்பவன் எவன்? | 0—0—6 |
| 19. லோககுருவின் அவதாரங்கள் | 0--0—6 |
| 20. பகவான கௌதம புத்தரின் சரித்திரம் | 0—0—6 |
| 21. வெள்ளியம்பலம் என்ற ஞானிகளின் சங்கம் | 0—1—0 |
| 22. மோனம் என்பது ஞானவரம்பு | 0—0—6 |
| 23. உதாஸீந ஸாது ஸ்தோத்ரம் (ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும் | 0—6—0 |
| 24 மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் | 0—0—6 |
| 25. தேவாலயம் | 0—0—3 |
| 26. பிரஹ்மஞ்ஞானமும் பிரஹ்மஞ்ஞான சபையும் | 0—0—6 |
| 27 ஸன்மார்க்கமுறையில ஹிதோபதேசம் | 0—1—0 |
| 28. மநீஷா பஞ்சகம் | 0—1—0 |
| 29. குருசிஷ்ய ஸம்பந்தம் | 0—1—0 |

---

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மஞ்ஞானஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "மானேஜர் தியாஸாபிகல் பப்ளிஷிங்ஹவுஸ், அடையாறு சென்னை" என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். 100 புத்தகங்களுக்கு 20 கமிஷன் கொடுக்கப்படும்.